பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 08 2026 THURSDAY    12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்றும் பாதிக்கப்பட்டன.
- நிலக்கரி சுரங்க ஏலத்தில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.
- தமிழக அரசின் நடப்பு நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட் இன்று பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- அஸ்ஸாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 95ஆக அதிகரித்துள்ளது.
- உலக இளையோர் Bridge சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

நாடாளுமன்ற நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்றும் பாதிக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், Hiroshima - Nagasaki நினைவு தினத்தை ஒட்டி உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌனஅஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து கேள்வி நேரத்தை நடத்த பேரவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா முயற்சித்தார்.

இருப்பினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, கேள்வி நேரத்தை நடத்த இயலாத சூழல் நிலவியது.

இதுகுறித்து அதிருப்தி தெரிவித்த பேரவைத் தலைவர், இதுபோன்ற நடவடிக்கைகள் ஏற்புடையதல்ல என்று கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே, அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்படுவதாக திரு. ஓம். பிர்லா அறிவித்தார்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டன.

அவை மீண்டும் கூடியபோதும் இதே நிலை நீடித்ததால் அவை நடவடிக்கைகள் பிற்பகல் இரண்டேகால் மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

>>>>><<<<<

*மத்திய அமைச்சர் திரு. அமித் ஷாவை, தேமுதிக பொருளாளர் திரு. சுதிஷ் இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.*

*தமிழகத்தின் அரசியல் சூழல் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>><<<<<

*பிரதமரின் இல்லந்தோறும் சூரிய மின்உற்பத்தி திட்டத்தின் கீழ், 12 லட்சத்திற்கும் கூடுதலான குடியிருப்புகள், 421 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் எரிசக்தி தொடர்பான சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டில் பங்கேற்று அவர் பேசினார்.*

*இந்த திட்டத்தின் கீழ், 50 லட்சத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் பயனடைந்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*இதில், 19 லட்சம் வீடுகளின் மின்கட்டணம் பூஜ்யமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.*

>>>>><<<<<

*நிலக்கரி சுரங்க ஏலத்தில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் நடைபெற்ற நிலக்கரித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.*

*மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், 14 சுற்று ஏலங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*15வது சுற்று ஏலம் தற்போது நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.*

>>>>><<<<<

*தமிழ்நாடு மண்வள பாதுகாப்பு இயக்கம், 600 கோடி ரூபாய் செலவில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் அறிவித்துள்ளார்.*

இன்று சட்டப்பேரவையில் நடப்பு நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் பேசினார்.

நடப்பு நிதியாண்டில் இந்த திட்டத்திற்காக 122 கோடியே 51 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உழவர் செயற்கை நுண்ணறிவுத் திட்டம் 2 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்,

பயறு வகைகள் மற்றும் உணவு எண்ணெய் வித்துகளின் தன்னிறைவுக்கான இயக்கம் 65 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்,

29 மாவட்டங்களில் குறு தானிய இயக்கம், 7 கோடியே 61 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்,

உழவர் சந்தைகள் 20 கோடி ரூபாய் செலவில் புரனமைக்கப்படும்,

பருத்தி மறுமலர்ச்சி இயக்கம், மக்காச்சோளம் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

>>>>><<<<<

முல்லைப்பெரியாறு அணை தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண, முதலமைச்சர்கள் நிலையில் பேச்சுகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை கேரளம் வலியுறுத்தியுள்ளது.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. Mons Joseph, முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து முழுமையாக சோதனை நடத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.

அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக பராமரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை மாற்றுவதற்கு கேரளத்திற்கோ, தமிழகத்திற்கோ அதிகாரமில்லை என்றும் திரு. Mons Joseph கூறினார்.

>>>>><<<<<

பத்மவிபூஷன் சுஷ்மா ஸ்வராஜின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிஜேபி நிர்வாகிகள் மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனார்.

>>>>><<<<<

அஸ்ஸாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 95ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மட்டும் மழை மற்றும் மழை தொடர்பாக சம்பவங்களில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

*Sivasagar* மாவட்டத்தில் மட்டும் 50 பேர் உயிரிழந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14 மாவட்டங்களில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளதாகவும், இதன் காரணமாக ஒரு லட்சத்து 60-ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் வீடு இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர்.

*Pratapgarh* மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பெய்த கனமழை காரணமாக, சேதமடைந்த நிலையில் இருந்த வீடு இன்று அதிகாலை இடிந்து விழுந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் 2 குழந்தைகளும் அடங்குவர் என்று அவர்கள் கூறினர்.

இந்த வீட்டில் இருந்த ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

ஜார்க்கண்ட் பணியாளர் தேர்வாணையத்தில் முறைகேடு நடைபெற்றதாக கூறி, மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் 13வது நாளாக நீடிக்கிறது.

அம்மாநிலம் முழுவதும் பல்வேறு மாணவர் அமைப்புகள் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பட்ட தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி, மாணவர்கள் இப்போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

>>>>><<<<<

அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று நிலநடுக்கம் நேரிட்டது.

*Siang* மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் நேரிட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5 புள்ளி ஒன்றாக பதிவானது.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் கண்ணிவெடியை அகற்ற முயன்றபோது, ஏற்பட்ட வெடிவிபத்தில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்தனர்.

*Mendhar அருகே கண்ணிவெடியை அகற்ற முயன்றபோது, இந்த விபத்து நேரிட்டதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.*

*>>>>><<<<<*

*செர்பியாவில் காட்டுத் தீ காரணமாக, 300 ஹெக்டேர் பரப்பளவிலான வனப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செர்பிய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*நவீன கருவிகளும் இதற்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*உலக இளையோர் Bridge சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.*

*சீனாவின் Hefei-ல் நடைபெற்ற இப்போட்டியின் 31 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Khaidem Shileima Chanu தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*இப்போட்டி சீனாவின் Moqi-யில் வரும் 30ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

*>>>>><<<<<*

*கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmita Chaliha காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-6 என்ற செட்கணக்கில் கொரியாவின் Kim Min Ji-யை வென்றார்.*

*இதர மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று, Tanvi Sharma மற்றும் Rakshitha Sree-யும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

*>>>>><<<<<*

*20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் Ashish Yadav மற்றும் Dharani Dharan இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

அமெரிக்காவின் Eugene-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் வட்டு எறிதலில் Amanat Kamboj-ம் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

St-Louis செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Praggnanandhaa தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

Rapid சுற்றில் கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்த அவர், Blitz 9வது சுற்று முடிவிலும் 18 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

ஜூடோ போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஜூனியர் பிரிவில், இந்தியாவின் Linthoi Chanambam முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியா - சிங்கப்பூர் இடையே 20 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது நட்புணர்வு கால்பந்துப் போட்டி இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

முதல் போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இந்த தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

Mazovia Open Tennis போட்டியில் இந்தியாவின் Siddhant Banthia - பல்கேரியாவின் Alexander Donski இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>END<<<<<